# திருக்குறள்

**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லுஞ் சினம்.**

## விளக்கம்:-

ஒருவன் சினம் (கோபம்) வராமல் தன்னைத் தான் காத்துக் கொள்ள வேண்டும். காத்துக் கொள்ளாவிட்டால் அச்சினம் அவனையே அழித்துவிடும்.

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

## விளக்கம்:-

நாம் ஒருவர் மீது சினமடைவது நிலத்தை கையால் அடிப்பது போன்றதாகும் .

**உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்.**

## விளக்கம்:-

உணவு உண்ணாமல் நோன்பு இருப்பவரைக் காட்டிலும் பிறர் கூறும் கொடுஞ் சொற்களைப் பொறுப்பவரே பெரியவர் ஆவார்.

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**

**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

## விளக்கம்:-

தன்னை வெட்டுபவரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல், தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே தலையான பண்பாகும்.

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

## விளக்கம்:-

நாம் யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதை மறந்து விட வேண்டும், ஏனெனில் தீமையான விளைவுகள் அச்சினத்தாலேயே ஏற்படும்.